சைவ மரபில் திருமுறைகளின் பின் எழுந்த பக்தி இலக்கியங்கள் பிரிவு 5

சைவ பக்தி இலக்கியங்கள் என்பவை சைவ சமய வரலாற்றில் அருளாளர்கள் அருளிய பாடல்கள் ஆகும். வேறு எந்த மொழியிலும் இல்லாதளவிற்கு தமிழிலேயே பக்தி இலக்கியங்கள் தோன்றியிருந்தன. பழங்காலத்திலிருந்து வளர்ந்துவந்த பக்தி நெறியைப் பின்பற்றி, சைவத்தை அருளாளர்கள் அருந்தொண்டாற்றி நிலைபெறச் செய்தனர். இந்த பக்தியுடன் கூடிய செயல்பாட்டுத் தன்மையே பக்தி இயக்கம்' என அழைக்கப்பட்டது . சைவசமயத்தின் பக்தி இலக்கியங்களில் முக்கியமானவை பன்னிரு திருமுறைகள் ஆகும்.இவை சங்க மருவிய காலத்திலும் அதன் பின்னரும் தோன்றிய சைவ சமய நூல்களின் தொகுப்பாகும்.திருமுறை என்ற சொல் தெய்வநூல் அல்லது தெய்வத்தன்மை உடைய நூல் என்று பொருள் தரும். இவை தவிரவும் இன்னும் பல சைவ பக்தி இலக்கிய நூல்கள் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் தோன்றி 2000 ஆண்டுக்காலச் சமய-சமூக வரலாற்றை அறியத் துணையாகின்றன. தமிழ், இசை, கலை, பெண்மை ஆகியவை உயர்ச்சி பெற இச் சைவ பக்தி இலக்கியங்கள் பெரும்பங்கு ஆற்றியுள்ளன.

வரலாற்றின் ஆரம்ப காலத்தில் தமிழர்கள் சமய வேறுபாடு இன்றி வாழ்ந்து வந்தனர். பின்னர் காலப்போக்கில் வாழ்க்கை நெறிமுறைகள், அறச்சிந்தையோடு கூடி, பக்தி இயக்கம் தோன்றுவதற்குக் காரணமாய் அமைந்தன. நாயன்மார்களால் தோற்றுவிக்கப் பெற்ற பக்தி இயக்கம் மேலும் வளர்ந்து, ஏறத்தாழ பத்தாம் நூற்றாண்டிற்குப் பின் சமயப்புரட்சியாகி, சமய வளர்ச்சிக்கு அடிப்படையாய் அமைந்தது. அதனால் மனிதன், மனிதப் பண்புகளோடு வாழ்வாங்கு வாழ்ந்து உயர்ந்தான். காலங்கள் தோறும் சான்றோர்கள் தோன்றி, பக்தி இயக்கம் என்னும் தேரைச் செலுத்தி வந்தனர் .இதன் விளைவாகப் பல்வேறு வடிவங்களில் இறையுணர்வும் பக்தி நெறியும் தொடர்ந்து வளர்க்கப்பட்டு வந்தன. அந்த வகையில் நாயன்மார்களிற்கு பின் வந்த எண்ணற்ற அருளாளர்கள் தம் வாக்காலும், நூல்களாலும் வாழ்வாலும் சைவத்திற்குப் பெரும் பணிகளாற்றியுள்ளனர். அவர்களில் ஒருவராகிய தாயுமானவர் சைவ சமயத்தின் சிறப்பை,

“சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்

கைவந்திடவே மன்றுள் வெளி காட்டும்; இந்தக் கருத்தை விட்டுப்

பொய் வந்துழலும் சமயநெறி புகுத வேண்டாம்; முத்தி தரும்

தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாரும் ஜகத்தீரே!”

என்று பாடி , மதம் மாறும் மாந்தரை நோக்கி எம் மதத்துக்கு மீண்டு வரும்படி அறைகூவல் விடுத்தார். இப்படியாக காலந்தோறும் தொடர்ந்து வரும் சமய நூல்களை, பக்தி இலக்கியம் என்னும் இலக்கிய வகையில் அடக்கலாம்.

அத் தன்மையில் திருமுறைகளின் பின் தோன்றிய பக்தி இலக்கியங்களாக சைவ சித்தாந்த நூல்கள் சித்தர் பாடல்கள் மொழிபெயர்ப்பு சைவ நூல்கள் தல புராணங்கள் வீரசைவ நூல்கள் கந்தபுராணம் போன்ற பொது நூல்கள். ஆகியவையுடன் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபர சுவாமிகள் இயற்றிய சகலகலாவல்லி மாலை ,பிள்ளைத்தமிழ், தாயுமானவரின் பரா பரக்கண்ணி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய வள்ளலார் சுவாமிகளின் திருவருட்பா, சிவபிரகாசமுனிவரின் நால்வர் மணிமாலை, மகாகவி பாரதியாருடைய பக்திப் பாடல்கள், போன்றன பெருமைக்குரியன. , கோபால கிருஷ்ண பாரதியார் முதலியோர் இயற்றிய கீர்த்தனைகள் எல்லாம் சிறப்பு மிக்க சில உதாரணங்கள் ஆகும் .

ஈழத்திலும் தன்னலம் மறுத்து சமயம் வளர்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், யோகர் சுவாமிகள் ,சின்னதம்பி புலவர் ,வரத பண்டிதர்,சுவாமி விபுலாந்தர் நவாலியூர்ச் சோமசுந்தரபுலவர் என காலங்கள் தோறும் அருளாளர்கள் தோன்றி இறைவனைப்பற்றிய பக்தி இலக்கியங்களைப் படைத்து சைவசமயிகளின் நித்தியமான பேரின்பத்திற்கு வழிகாட்டி செல்கின்றனர். நாமும் அவர்கள் காட்டிய வழிகளில் நின்று சைவ சமயிகளாக வாழ்ந்து உயர்வடைவோமாக. .